149429

அறுசுவை வெண்பா

G

Q25:417
N22
149429

140

அநுசூயை வெண்பா

1? SEP 1922

O25:4 17
N22
144429

ப. நல் - குப்புசாமி முதலியார்

உ

சிவமயம்.

அநுசூயை வெண்பா

17 SEP 1922

தொண்ணூடு பாடசாலை [illegible]
மாமண்டூர் வடபாதி
நல் - குப்புசாமி முதலியார்
இயற்றியது

சாது அச்சுக்கூடம், சென்னை.
1922

149429

894.811
2236

முகவுரை

பெண்மக்கள் தங்கள் உயிரினும் உயர்வாகக் காக்கவேண்டுவது கற்பு. அவர்கள் உயிரை இழந்தாலும் இழக்கலாம்; ஆனால் கற்பை இழத்தலாகாது.

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மை யுண்டாகப் பெறின்.

என்று திருவள்ளுவர் கற்பின் திறத்தைக் கூறியிருத்தலால் கற்பின் மேன்மை இனிது விளங்கும்.

நமது நாட்டில் கற்பால் கடவுள் தன்மை எய்திய பெண்மக்கள் பலர். அவருள் அநுசூயை என்பாரும் ஒருவர். அநுசூயையின் கற்பின்முன்னே இரும்புக்கடலை வெந்தது; மும்மூர்த்திகளும் குழந்தைகளானார்கள். இச்செயற்கருஞ் செயல் செய்த இப்பெருமாட்டியின் கற்பின் திறத்தை என்னென்று கூறுவது ?

அநுசூயையின் வரலாறு பாகவதம், நாரதர் கலகம், தண்டலையார் சதகம், விநோதரசமஞ்சரி முதலிய நூல்களில் ஓதப்பட்டிருக்கிறது. இந்நூல்களை நான் பயின்றபோதும், இக்கற்புக்கரசியாரைப்பற்றிய புராணபடனங்களைக் கேட்டபோதும் இத்தேவியார் சரிதத்தை வெண்பாவால் பாடவேண்டுமென்ற அவா எனக்கு உண்டாயிற்று. அவ்வவாவினை தொண்ணுடு ஜமீந்தார் ம-ா-ா-ஸ்ரீ வேங்கடகிருஷ்ண ரெட்டியார் அவர்களுக்குத் தெரிவிக்க, அவரும் எனக்கு ஊக்கமூட்டினார்.

அவ்வூக்கத்தின் எழுச்சியால் "அநுசூயை வெண்பா" என்னும் இந்நூலைப்பாடி முடித்து, இதனைச் சென்னை, சாது

அச்சுக்கூடத்தில் அச்சிடவேண்டிச் சென்னைக்குச் சென்றேன். ஆங்கே தற்செயலாகத் தேசபக்த சிரோமணி ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் நோக்கம் இந்த அநுசூயை வெண்பா மீது பட்டது. அவர் உதவியால் வெண்பா இலக்கணத்திற்கு முரண்பட்ட சில வழுக்களைக் களையும் பேறுபெற்றேன். வேறு பல ஐயப்பாடுகளைத் தொண்ணூடு சமஸ்கிருத பண்டிதர் பிரமஸ்ரீ மகாலிங்க சாஸ்திரியார் அவர்கள் உதவியால் நீக்கிக்கொண்டேன்.

பாக்கள் யாக்க முயன்றது இதுவே முதன்முறை யாதலால் புத்தி பூர்வகமாகவும் அபுத்தி பூர்வகமாகவும் பல குற்றங்குறைகள் இந்நூலில் நிகழ்ந்திருக்கும். அவைகளைக் காணும் அன்பர்கள் தயை புரிந்து குறிப்பிட்டு எனக்கனுப்பினால் அவைகளை நன்றி யறிதலோடு ஏற்று மறுபதிப்பில் திருத்தமாக அச்சிடுவேன். பாக்களிலுள்ள சில அரும்பதங்கட்கு உரையும் வரைந்திருக்கிறேன்.

இந்நூல் இனிது முடிவுற எனக்கு உதவிபுரிந்த ஸ்ரீமான்கள் முதலியாரவர்களுக்கும் சாஸ்திரியாரவர்களுக்கும் சாது அச்சுக்கூடத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

ஜ. தொண்ணூடு,
2—9—22.

நல் - குப்புசாமி.

சென்னை "நவசக்தி" ஆசிரியர்

ம-ா-ா-ஸ்ரீ, திரு.வி. கலியாணசுந்தர முதலியார்

கூறியது.

வேகா அயக்கடலை வேகுமோ சேயுருவா
ஆகா இறைமூவர் ஆவரோ—சாகாத
கற்பா லநுசூயை காட்டினு ளச்செயலைப்
பொற்பாரும் பாரதத்தில் போற்று.

அன்னாள் வரலாற்றை அன்புடனே வெண்பாவால்
சொன்னான் சுவைபெறவே சோர்வின்றி—மன்னுவட
பாதிசுப்ப ராயனளி பண்குப்புச் சாமியவன்
நீதி யறம்விளங்க நின்று.

அநுசூயை வெண்பா

விநாயகர் வணக்கம்

கல்விப் பெருக்கங் கனத்தபுகழ் ஞானமுறு
மல்லல் பிணிப்பவமு மற்றுவிடும்—நல்லமரு
தண்டுளபத் தார்மார்பன் றன்மருகன் சேவடியை
யண்டி யடைவா ரவர்க்கு. (க)

கதை கேட்டவர்

பங்கயமுஞ் சாலிவளர் பண்வணைசூழ் தொண்ணாட்டில்
வெங்கிட கிட்டனெனும் வீரன்தன்—துங்கமிகு
அத்திரியின் மங்கை யநுசூயையின் பாயெழுதிப்
புத்தகமாய்த் தாவென்றான் போந்து. (உ)

கதை கூறினவர்

பன்னுங் கதைகேட்கப் பண்புள்ள வெண்பாவாய்த்
துன்னுஞ் சுவையோடு தொல்லுலகில்—மன்னுவட

(க) புகழ் - கீர்த்தி, ஞானம் - அறிவு, பிணிப்பவம் - ஜெனன மரண வேதனை, தண் - குளிர்ச்சி, மருகன் - மருமகன் (அதாவது) விநாயகக் கடவுள், பெருக்கம் - செல்வம்.

(உ) பங்கயம் - தாமரை, சாலி - செந்நெல், பண்ணை - நிலம், அத்திரி - சப்தரிஷிகளி லொருவர், (அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பாரத்துவாசன், வசிஷ்டன், விஸ்வாமித்திரன் ஆக - எ.)

மாதுப்புச் சாமி மகிழ் சுப்பராயன்சேய்
ஆக வுரைத்தே னணைந்து. (௧)

பாடின காலம்

பத்தொன்ப தேழ்மூன்று பார்தன் மதியாண்டி
லத்து துலாமைந் தசுரகுரு—சத்தமுன
பஞ்சமியா மும்மீன் பகர்துலா லக்கினத்தில்
மஞ்சகவி சொன்னேன் மகிழ்ந்து. (௨)

அவையடக்கம்

மாணிற் புனலோடை மாநதியிற் சேர்ந்தாலு
மாணிற் பதர்நெல்லி லுற்றாலும்—வீணல்ல
சுற்றமென் றேற்பதைப்போற் சொற்கவியை மேலாகக்
கற்றவருங் கொள்வார் களித்து. (௩)

மாத ரறவோரை மனதிற் றுதித்தவுடன்
கோதற்றுத் தூய்மையுறுங் கொள்கைபோ—லோது
மவையோரைப் போற்றி வழுவை பாவால்
நவைநீக்கி சீர்பெறுக நம்பு. (௪)

---

(௧) சேய் - குமாரன்.

(௨) பத்தொன்ப தெழுமூன்று - பத்தொன்பது (எழு மூன்று) இருபத் தொன்று, 1921 ஆண்டு - வருஷம், துலாம் - ஐப்பசி, அசுரகுரு - சுக்கிரன், மும்மீன் - மிருகசீரிடம், மஞ்சு - அழகு.

(௩) மாணில்லா - சுத்தமில்லாத (அசிங்கமான), பதர் - சாப்பாடு (அரிசி).

(௪) மாதரறவர் - சரஸ்வதி, இந்திராணி, இலக்குமி, அதிதி, அநசூயை, அருந்ததி ஆக - ௬, கோது - குற்றம், அவையோர் - புலவர், நவை - குற்றம்.

அநுசூயை வெண்பா

கணேசர் துதி

நாரையூர் நம்பிக்கு நாலிரண்டு செல்வமு
மீறில்லாப் பாழிய மீந்தகரி—கூறுமிக்
கற்பு ளநுசூயையின் காதை கனிந்துரைக்கப்
பொற்பு மதிதருவார் போந்து. (க)

பரமன் துதி

அஞ்சும்யாழ்ப் பாணனை யாதரித்தே யேமனை
யிஞ்சிகடக் கோட்டு ஞெகிழ்விற்றன்—வஞ்சியர்கள்
நன்னடையைக் கற்க நவிலுமிக் காதைக்கு
மின்மதியை நீட்டுவார் மேவி. (உ)

மால் துதி

குண்டகனுங் கோளகனுங் கோள்கைத்தா யத்தனையும்
அண்ணனையுங் கொன்றிட்ட வைவருக்கும்—புண்ணில்லை

(க) நம்பி - நம்பியாண்டார் நம்பி, நாலிரண்டு செல்வம் - அஷ்டஐஸ்வரியம், (ஆயுள், குலம், சம்பத்து, வித்தை, தனம், விவேகம், அழகு, குணம் ஆக - அ), ஈறு - கெடுதல், கரி - யானை முக விநாயகக் கடவுள், பொற்பு - மிகுதி, பெரியபுராணம் - திருமுறைகண்ட புராணம், பாழி - பதம்.

(உ) அஞ்சும் - பயப்படும், யாழ் - வீணை, ஏமன் - ஏம நாதன், இஞ்சி - மதில், நவிலும் - கூறும், (திருவிளையாடல் விறகு விற்ற படலம்). ஞெகிழ் - விறகு.

(௩) குண்டகன் - நாயகன் அறியாமல் சோர நாயகனைச் சேர்ந்து பெற்றபிள்ளை, கோளகன் - விதவை யொருவனைச் சேர்

பத்தியுள்ளா ரென்று பதங்கொடுத்த மாலிதற்குப்
புத்தி தருவார் பொருந்து. (ங)

சரஸ்வதி துதி

புலவர்க் கிரங்கிப் பொலிசிலம்பு பீடந்
தலையு முயிர்தந்த தாயே—யலைசூழிப்
பூவி லநுசுயை பொற்கதையைப் பூட்டவென்
நாவிலே வந்துநீ நண். (ச)

நூல்வரலாறு

மாலரனு நான்முகனு மாநிலத்து மாதினிடஞ்
சீலமுடன் புத்திரராய்ச் சென்றிருந்த—கோல
முரைக்கின்றேன் கேளென் றுரைத்தார் பரீச்சித்
திறைக்குச் சுகமுனிவ ரேத்தி. (ரு)

வீணைமுனி யோர்நாள் விணமயன்வா ழிற்செல்ல
ஆவண மயனுமகிழ்ந் தாசனமிட்—டேவ
மடமலரா லர்ச்சித்து மாதவாவிவ் வேழை
யிடம்வந்த தென்னென்று னேங்கி. (சு)

ந்து பெற்றபிள்ளை, தாயைக் கொன்றவன், தந்தையைக் கொன்ற வன், தமையனைக் கொன்றவன், முறையே - அர்ச்சுனன், விதுரன், பரசுராமன், பிரகலாதன், விபீடணன் ஆக - ரு.

(ச) கலைவாணியருளால் - கம்பர் பொற்சிலம்பும், காளமேகர் (வெள்ளை) என்னும் - வெண்பாவால் பீடமும் - ஒட்டக்கூத்தர் - (கலைவாணி நீ) என்னுங் கவியால் - செங்குந்தர் தலையாவியும் பெற்றார்கள்.

(ரு) கோலம் - அழகு, பரீச்சித்து - அர்ச்சுனன் பேரன் - அபிமன்னு பிள்ளை, சுகம் - கிளி (கிளிமூக்குடைய முனி.)

(சு) மயன் - தெய்வலோகத்து தச்சன், மாதவம் - பெரிய தவம்.

மங்களமா யென்று மயனே நீவாழ்கநள்
கங்குல் சமழ்ப்புங் கரும்போன்ஞல்—மங்காக்
கடலைசெய் தீயெனக் கைநீட்ட வான்வாழ்
விடலை யவனளித்தான் வேண்டி. (எ)

கருங்கோள் முதிரையைக் கண்டு வியந்து
பொருந்த யிடையல் பொருத்தி—திருந்தபோன்
பீடத்தை விட்டுப் பெயர்ந்துமால் பாலன்வாழ்
மாடத்தை நாடினன் மாண்பு. (அ)

பாரதியா ளாழ்முனியைப் பார்த்து மனமகிழ்ந்து
நாரதனே யெங்கிருந்து நாடினய்—தாரணியிற்
கோடிக ளேதேனுங் கண்டா லதையெனக்குப்
பாடி யுரையென்ருள் பார்த்து. (கூ)

மகிழ மதிசயங்கள் மாநிலத்தி லில்லை
புகழனக் குண்டாகும் போற்ரு—மிகழாவிக்
கூலத்திற் குப்புங் குணமற்றுங் கூட்டியிக்
காலத்திற் ருவேன்ருன் காட்டி. (க0)

அயக்கடலை தன்வண யயன்தேவி கண்டு
தியக்கமாய் நாரதவனத் திட்டி—துயக்கிமனங்
கற்றவுன் வித்தையைக் காட்டுகிருய் தாயிடத்தி
லற்றிடுவோ யென்ரு ளதிர்த்து. (கக)

மீட்டுங் கடலையை மெய்ம்மை முனிபெற்றுச்
சேட்டையின் தங்கைவாழ் சக்கரத்தின்—கோட்டை

(எ) கங்குல் - இருள், கரும்பொன் - இரும்பு, விடலை - வாலிபன், சமழ்ப்பு - நாணம்.

(அ) முதிரை - கடலை, பொருத்தி - மூடி.

(கூ) பாரதி - சரஸ்வதி, கோடி - அதிசயம்.

(கக) அயம் - இரும்பு, தியக்கம் - கலக்கம், துயக்கம் - தளர்ச்சி, அதிர்த்து - இடித்து.

(கஉ) சேட்டை - மூதேவி, சக்கரம் - சமுத்திரம்.

கடந்துள்ளே சென்று கடற்பிறந்த கோதை
யடர்ந்து யடிபணிந்தா ளங்கு. (கஉ)

பாதம் பணிந்திருந்த பண்ணியற்றும் யாழ்முனியை
யேதமின்றி வாழ்கவென வேத்தியே—மாதவனே
யெங்கிருந் திங்குற்ற யென்னபோதி யென்றுமால்
மங்கையுங் கேட்டாள் மகிழ்ந்து. (கரு)

அயக்கடலை தன்வண யலரா ளிடத்திட்டுக்
கயக்கின்றி யார்சுவையுங் காட்டி—வியக்கமாய்ப்
பாகமுஞ் செய்ததைப் பட்சமுடன் தாவென்ன
வேகமுங் கோண்டாள் விரைந்து. (கசு)

நாரதனே யென்கலகம் நாட்டவிக் கூலத்தைச்
சாரமுடன் செய்யென்று சாற்றினாய்—தாரகனே
இக்கடலை தன்வண யிசைவாகச் செய்வதற்
கோக்குமோ வென்று ளுயிர்த்து. (கஎ)

தந்த முதிரையைத் தாவென்று வாங்கியர
னந்தப் புரநாடி யாறுகோள—நந்தி
விடையன்றிப் போக வழிவிடோ மென்ன
விடைகோண்டு சென்றான் விரைந்து. (கசு)

(கஉ) கடற்பிறந்த கோதை - லக்ஷிமி.

(கரு) ஏதம் - துன்பம்.

(கசு) அலராள் - இலக்குமி, கயக்கம் - சோர்வு, வியக்கம் - பெருமை, வேகம் - கோபம், (சுவை : கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆக - சு.)

(கஎ) தாரகம் - மந்திரம் (குருமூலமா யறியவேண்டும்), உயிர்த்து - பெருமூச்சுவிட்டு.

(கசு) (கஎ) முதிரை - கடலை, அந்தப்புரம் - பெண்கள் வாசம், நந்தி - ரிஷபதேவர், விண்டு - விஷ்ணு, மூவிடம்-மூன்று லோகம் (மத்திய, சுவர்க்க, பாதாளம்.)

கண்டு மலைமாதைக் கால்வீழ்ந்து தெண்டனிட்டு
அண்டி யருகிருந்த வையரை—விண்டுதங்கை
நாரதனே சௌக்கியமோ நாடுமுலி டஞ்சுகமோ
தாரகனே கூறென்ருள் தாவி. (கஎ)

மலைமகளே போற்றி மதக்களிற்றை யீன்ற
அலைதுயின்ருேன் பின்னை யறத்தாய்—நிலைசுகமே
செம்மகளும் வாக்காளுஞ் செய்யமுடி யாதென்ருர்
இம்முதிரை யட்டென்ரு னிட்டு. (கஅ)

கருங்கோண் முதிரையைக் கௌரியவள் கண்டே
இரும்பென் றதையுணர்ந் தேங்கிப்—பெரும்புள்
திருட்டிருட்டிக் காட்டித் திருத்தழுந்த முத்தங்
கரங்கரத்திற் சேர்த்தாள் கடிந்து. (கக)

கட்செவிக்கு நஞ்செயிறு கருந்தேட்கு வால்முனையில்
வட்புலவர் வாய்ச்சொல்லில் வாய்க்குமே—துட்டருக்கு
அங்கமெலா நஞ்சா மரும்பண் படிற்றுமுனி
யெங்கும் விஷமா மெழுந்து. (உ0)

சலகப் பிரியனெனுங் கட்டுரைகைக் கொண்ட
உலகப் பிரசித்தி உண்டு—கலகமிங்கு
யார் யார்க்கு மூட்ட நீ வெண்ணியிக் கூலத்தைக்
கூருகக் கொண்டாய் குறித்து. (உக)

(கஅ) மலைமகள் - பர்வதராஜன் புத்திரி, மதம் - மயக்கம், களிறு - யானையாகிய விநாயகக் கடவுள், அலை - கடல், பின்னை - தங்கை, நிலை - பூமி, செம்மகள் - இலக்குமி, வாக்காள் - சரஸ்வதி, உலை - கொல்ல னுலைகளம், அட்டு - சமைத்தல்.

(கக) கௌரி - பார்வதி, பெரும்புள் - கோட்டான், திருட்டி - கண், முத்தம் - உதடு, கரம் - கை.

(உ0) கட்செவி - கண்ணே செவியாக உடையது (பாம்பு), நஞ்சு - விஷம், எயிறு - பல், பண் - இராகம். படிறு - வஞ்சனை.

நாடிநீ மூவுலகும் நாரதனே சென்றுலு
மாடி நிழலொக்கு மாகாது—கோடி
யயமுதிரை தன்வன யவிப்பா ருளரோ
சயமில்லை நடவென்றாள் சாட்டி. (௨௨)

அருந்த மெதுவாய் வறுசுவையுங் கூட்டித்
திருந்த பதஞ்செய்து தீர்ப்பே—னரன்தேவி
பாரென்று கூறிப் பகருமறு சுவையவா
ழூர்நாடி சென்று னுவந்து. (௨௩)

வெண்பொன் மணிவரையை விட்டுமோ வேலைசூழ்
கண்ணகன்ற ஞாலஞ் சடிதடைந்து—பெண்ணமுதைக்
காணவரு நாரதன் கல்லகஞ் சிந்தரியின்
மாணழகைக் கண்டான் மகிழ்ந்து. (௨௪)

உச்சி வரையி லுறைபுனலும் பானுவின்
கிச்சால் புனலாகிக் கீழிறங்கத்—துச்சின்
பதலைசூழ்ச் செல்லுநீர் பாற்றனம் பூணுய்
விதம்பலவுங் கண்டான் விரைந்து. (௨௫)

கழிமுகங்க ளெல்லாங் கரிகுழலாள் மாலை
மழைதனமும் பொச்சை மலையுங்—குழைமகளிர்

---

(௨௨) ஆடி - கண்ணாடி, கோடி - புதுமை.

(௨௪) வெண்பொன் - வெள்ளி, வேலை - சமுத்திரம், கண்ணகன்ற பரந்தஞாலம் - பூமி, கல்லகம் - மலை, சிந்து - நதி, அரி - சோலை.

(௨௫) வரை - மலை, உறை - கட்டி, புனல் - ஜலம், பானு - சூரியன், சிச்சு - சூடு, துச்சு - ஒதுங்கி, பதலை - குன்று, தனம் - கொங்கை, பூண் - முத்துமாலை.

(௨௬) கழிமுகம்- அருவி, மாலை-முத்தாரம், மழை-குளிர்ச்சி, பொச்சை - குன்று.

17

புல்லறுகு சீயம் புகலெண்கு கந்தரத்தில்
மெல்லசெல்ல கண்டான் மிரண்டு (உசு)

கொக்குநாய்க் கீரி குடங்களிறு மூரிமான்
நக்குதேன் கோலம் நடவலமா—பொக்கம்
வடவை வருடைகள் வாய்விட் டரற்றி
விடரேகக் கண்டான் விரைந்து (உஎ)

வரையருவி யெல்லாம் வகையுளகா லாகிக்
குரைகொண் டொருமுகமாய்க் கூடி—விரையுண்
மலரேந்தி மாநதியாய் மண்டலத்தி லோடும்
சிலசிந்தைப் பார்த்தான் சிரித்து (உஅ)

அகரிலஞ்சி யார மரிசண் பகமா
நிகரில்லா நாகம் நிறைபாற்—புகரும்
பலசுபவண கன்னல்வாழ் பாரின்னீர் கூட்டி
நிலங்குடைந்து சென்றனவாம் நீண்டு (உகூ)

தரளங் கரையோதுக்கித் தைய விரைந்து
புரளப் புனற்கயங்கட் புக்கிப்—பரவையை
நாடி வருநதிகள் நாரதனும் தாண்டிப்பி
ன்னேடினன் சோவலக் குவந்து (௩0)

(உசு) புல் - புலி, அறுகு - யாளி, சீயம் - சிம்மம், எண்கு- கரடி, கந்தரம் - குகை.

(உஎ) கொக்கு - குதிரை, குடம் - பசு, களிறு - யானை, மூரி - எருது, நக்குதேன் - காட்டுப்பசு, கோலம் - பன்றி, நடவலமா - ஒட்டை, பொக்கம் - மிருதி, வடவை - எருமை, வருடை - ஆடு, விடர் - மலை குகை.

(உகூ) அகர் - அகில், இலஞ்சி - மகிழ், ஆரம் - சந்தனம், அரி - மூங்கில், பவண - அரசு.

(௩0) தரளம் - முத்து, பரவை - சமுத்திரம்.

உவணஞ் சிகிநீ ரூர்பூவைக் கூகைத்
தவசிகினிப் போதா தனிப்புள்—நவதிசையில்
நாடிப் பேடையுடனே நற்கூ டடைவதையு
மூவேதுங் கண்டா னொலித்து (௫௧)

கான மயிலாடக் கண்டுசுதி மாபோட
ஞான பிகந்தத்தை நாவாட—பேனம்
நிறைபுனலி னாதம் நேடுவோர் முழவாய்
மறைமனத்தான் கண்டான் மகிழ்ந்து (௫௨)

பூட்டாட்ட வைபவங்கட் பார்த்து மனமகிழ்ந்து
நீட்டிப் பரிசளிக்கும் நேர்மைபோ—லூட்டப்
பலகனிகள் வைப்பும் பருக நறவுந்
தலயசைத்துத் தந்தனவே தார் (௫௩)

வானமளாஞ் சோலை வரையிருநீர் நாப்பண்மின்
ஞானம் புரவு நனியிடத்தி—லூன
மறியாவா ழத்திரியி னாச்சிரமங் கண்டு
புரிநூலான் சென்றான் புகழ்ந்து (௫௪)

கலகஞ் செயவேண்டிக் கற்பகம்விட் டிப்பூ
உலகுக்கு நாரத னாரு—நிலைமையை
யத்திரியு ஞான வறிவா லறிந்துதன்
பத்தினியைக் கூவினார் பன்னி (௫௫)

---

(௫௧) உவணம் - கருடன். சிகி - மயில், பூவை - நாகண வாய், கூகை - கோட்டான், சிகினி - வலியன், போதா - நாரை, புள் - பருந்து.

(௫௨) மா - வண்டு, பிகம் - குயில், தந்தை - கிளி, பேனம்-நுரை, முழவு - மத்தளம்

(௫௩) வைப்பு - இடம், பருக - குடிக்க, நறவு-தேன்.

(௫௪) இருநீர் - அதிக ஜலம், நாப்பண் - மத்தி.

19

149429

பெண்ணே வெளிச்சென்று பின்வருவேன் நீசுகமாய்க்
கண்ணே யிருவென்று கண்டித்துத்—தண்டேன்
நறையுண் டயர்ந்துவாழ் நந்தவனம் நீங்கி
மறைகொண் டிருந்தான் மகிழ்ந்து (கூசு)

விலங்கினங்க ளார்ப்பும் விலங்கினெதிர் நாதங்
கலங்கின்றி யொன்ருகக் காட்ட—வலங்க
லறல்திரைக ளாகுலமு மாசுகப் பாட்டு
மறவர்க்கு மத்தமென்ரு ஞங்கு (கூஎ)

அரிபுட்ட நாத மழைப்பதைப்போற் கூவ
அரிகுழைக ளுவ்வியைப்போ லாடப்—பரிவாய்
முகமலர்கள் மங்களமு மூரலுமே காட்ட
மகரந்தம் வீசிடவு மைந்து (கூஅ)

Q25:417
M22

அநுசுயையைக் காணு மவாவாற் கலத்தை
யினிய சுதியா யிசைக்கக்—கனிவினே
டைந்தேட்டு மெட்டு மறிந்துபதம் பாடியம்
மந்திரத்திற் சென்ருன் மகிழ்ந்து (கூகூ)

அத்திரியின் பன்னி யநுசுயையே நீவாழி
நித்தியசு மாங்கலியாய் நீவாழி—தத்துங்

(கூஎ) விலங்கு - மலை—, மிருகம், அலங்கல் - அசைவு, அறல் - ஜலம், ஆசுகம் - பறவை, அறவர் - பெரியோர், மத்தம் - களிப்பு.

(கூஅ) அரி - கிளி, புட்டம் - குயில், அரிகுழை - ஒளி தளிர், உவ்வி - சிரம்.

(கூகூ) கலம் - வீணை, மந்திரம் - ஆசிரமம், ஐந்து - தண்டு, பத்தர், நரம்பு, முறுக்காணி, கொழுவாணி; எட்டு - பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, கையூழ், விளையாட்டு, குறும்போக்கு; எட்டு - வார்த்தல், வடித்தல், உந்தல், உறழ்தல் உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டை.

குரைகடற்சூழ் பூவிற் குலமாதர் நின்போல்
நிறையுடையோர் வாழ்வார் நிலத்து (சo)

என்று முனி வாழ்த்த விளங்கிழையாள் மெய்சிலிர்ப்பக்
கன்று விழிநீர்க் களிகாட்டச்—சென்றே
யடிவீழ்ந்து போற்றி வடியோர்செய் பூஜோ
குடிப்பயனே வுற்றதென்றாள் கூப்பி (சக)

இனியமொழி சால வியப்பிநன் றன்கு
கனியுமுப சாரங்கட் காட்டித்—தனிமுனியே
மந்திரத்தைத் தேடி மனதில் நினைத்துவந்த
தந்திரத்தைக் கூறேன்றாள் தாழ்ந்து (சஉ)

கற்புக் கணியேயிக் கார்கோன் முதிரையை
அற்போ டறுசுவையோ டாக்கிப்—போற்பா
யருந்தத் தாவென்று னன்னமே யின்று
விருந்தினனும் கேட்டான் விரைந்து (சங)

முனியின் மொழிகேட்டு முற்றால் மறுவை
கனிபோக்கிக் கூலத்தை நாடிக்—கனிவோடு
பாண்டத்தி லிட்டுப் பயங்கூட்டிச் செந்தீயின்
நீண்டகல் லிற்பெய்தாள் நின்று (சச)

மணந்த கணவர் மலரடியைப் போற்றி
வணங்கி வடவையை வாயா—லணங்கு
நிறைமுறை நீங்காத நேரிழையா ளாகிற்
குறையின்றிக் கூட்டேன்றாள் கூர்ந்து (சரு)

கற்பு வதியாள் கதைத்தற் கனற்கேட்டு
விற்புருவக் கோனாள் விருப்பம்போற்—வற்பா

(சச) முற்று - முறம், மறுவு - கெடுதி, பயம் - நீர், கல்வி- அடுப்பு.

(சரு) வடவை - தீ.

(சசா) கதைத்தல் - சொல்லல்,

யறுசுவையுங் கூட்டி யதிர்ப்புடனே மீயத்
திருநகையாட் கண்டாள் தெளிந்து (சசு)

கண்டு கடவலையைக் காதல் முனிக்கன்றே
யண்டியநு தூயை யளிக்கவே—தண்டு
முனிபார்த்து மெச்சிமா மொய்குழவல வாழ்த்தித்
தனிநாடு சென்ருன் தணிந்து (சஎ)

உத்தரையின் மைந்த னுயர்சுகப் பிர்மத்தின்
பத்தியோ டீர்தாவளப் பாராட்டி—முத்தோழிலார்
பன்னிமார் செய்யாப் பணியை யநுசூயை
யென்வலியாற் செய்தா ளியம்பு (சஅ)

நிறையுள்ள மாதர் நினைத்த விதமே
குறையினறிக் காரியத்தைக் கோள்வா—ரறையுங்
கழற்கால் மதிவேந்தே கற்புள்ள வோர்மா
தழலவித்துச் சென்ரூ ளமைந்து (சகூ)

காட்டில்வில் வேடனையோர் கன்னிதன் நாட்டத்தின்
கூட்டு மனலால் கொளுத்தினுள்—நாட்டிலே
எல்லின்றி யல்லாக வென்றூழ் பரிதடுத்தா
ளல்லலடை யாதோ ரணங்கு (ருo)

அனல்மூழ்கி யோர்மா னறிவித்தாள் கற்பைச்
சினவிழியைக் கண்டு சிரித்து—வனத்தின்
நடத்தையைக் காட்டப் பகமல்ல வென்ருள்
வடசுக்கை யானுளோர் வல்லி (ருக)

(சசு) அதிர்ப்பு - நடுக்கம்.

(சஎ) தண்டு - வீணை.

(சகூ) சந்திரமதி.

(ருo) தமயந்தி, நளாகினி. நாட்டம் - கண், எல்லி - பகல், அல் - இருள், என்றூழ் சூரியன்.

(ருக) பகம் - கொக்கு, சுக்லக-நட்சத்திரம். சீதை, வாசுகி.

மரித்த கணவர்க்கா மன்ருடி காலமுன்
வரித்த வுயிர்பெற்று வாழ்ந்தாள்—பெருத்தகுழு
பன்னியர்கட் கற்பாற் பலசெய்யத் தார்முனிக
ளுன்னினர் மண்ணின்மே லூர்ந்து (௧௨)

அட்டிவலயும் வன்னியுமோ ராட்டி கரியாகத்
துட்ட சகளத்தி முன்னழைத்தாள்—கெட்டசில
ஆடவர்கட் கஞ்சி யகத்தான் வரும்வரையோ
ராடவனுங் கல்லான ளாங்கு (௧௩)

கலத்தாற் புனற்கடந்த காந்தனதில் வீழ
வலத்தா லவன்மங்கை யாடச்—சலத்தினவல
கையா லடைந்தாள் கருங்குரங் கானள்தன்
மெய்யன் வரும்வரையோர் மின் (௧௪)

கூபத்தில் மாற்ருள் குழவிவிழத் தன்வழியை
யாபத்திற் போட்டொருத்தி யாதரித்தாள்—கோபித்த
தாதியர்கள் சொற்கேளா தன்கணவன் சொற்போல்பெண்
ணோதந் தடுத்தா ளுவந்து (௧௫)

இகலரசர் மின்முடியை யேற்றுமிறை யேகே
ளகல்நிலத்தார் கற்பி னழகைப்—புகலசா
லுண்டெனப்ப ரீச்சித் துலகணங்கு நீர்மைபோல்
விண்ணணங்குக் கில்லயோ விள் (௧௬)

மன்மாவில் ஞானசற்கு மாதாகத் தோன்றிமாய்ப்
பொன்மானக் கோல்லரசைப் பூவிட்டு—வன்கானிற்
காந்த னுடன்சென்று கற்பின் வழியைப் போன்
காந்தறிந்தா ளிம்மாதைக் கண்டு (௧௭)

---

(௧௨) கால் - இயமன், குழு - கூட்டம். அருந்ததி, சாவித்திரி, தாருகமுனி பத்தினிகள்.

(௧௩) அட்டில்-மடப்பள்ளி, கரி - சாக்ஷி (சிலப்பதிகாரம்.)

(௧௪) கலம் - படகு, அலம் - துக்கம், (சிலப்பதிகாரம்.)

(௧௫) கூபம் - கிணறு, ஓதம் - வெள்ளம், (சிலப்பதிகாரம்)

கூரமவா நீக்கிக் குணமாகத் தன்வனப்போல்
நார முளரேன்று நாடுவதாற்—கோர
மதுயைப் பதமாற்றி யன்துயை யாம்பேர்
விசுவசித்து வைத்தார் விரைந்து (ருஅ)

பொன்னுலகின் மாதர் புகழ்மிகவே யானுலு
மண்ணுலகின் மாதர்க்கு மாணுண்டா—மெண்ணுங்கா
லெவ்வுலகி லுள்ளாரு மீடேறு நோன்பெடுக்க
விவ்வுலகைச் சேர்வா ரிசைந்து (ருகூ)

ஆதியந்த மற்ற யருஞ்சோதி யொன்றன்றி
மீதிபேர் யார்க்கு மெலிவுண்டாம்—நீதி
தெரிந்து பவமறுக்கத் தேய்த்தன்னுட் காண்போ
ரருந்துவார் மண்மீ தமர்ந்து (சூ0)

ஆகையால் முன்னு ளமரர்கோன் தீதொழிக்க
ஓகையா யாசானே டேரிழிந்தான்—வாகையாம்
தாரணியுந் தோளா தரணியிலே தேவர்கள்
நூறணியாய் வந்தெடுப்பார் நோன்பு (சூக)

எடுக்குந் தொழிவல மியற்ற நினைப்போர்
முடிக்குமுன் கம்ப முதவா—மடிக்கும்
புலியைக் கிலியடிக்கும் புத்தேள்போல் நல்லாள்
வலியிழந்தார் வன்கடவல வாங்கி. (சூஉ)

முத்தொழிலா ரம்சங்கள் மூவுலகுஞ் சென்றுநூல்
சித்திக்க வேண்டியே சிந்தித்துப்—புத்தியில்
நாரதனு மெண்ணி நடத்திஞ னிச்சுதை
யீரமாய்க் கேளென்று னிங்கு. (சூரு)

(ருஅ) கூரம் - பொறுமை, நாரம் - அன்பு, கோரம் - கொடுமை.

(சூஉ) கம்பம் - நடுக்கம், புத்தேள் - புதுமை.

(சூரு) ஈரம் - அன்பு.

நாடி வியனுலகை நாரதனுந் தீவிரமா
யோடிப் பிதாவி னுலகுபோய்—மாடியில்
பாரதியைக் கண்டு பணிந்து கடலையின்
சாரதவணப் பாரேன்முன் சார்ந்து. (சுச)

கண்டு கடலையைக் கைநீட்டி வாயிட்டுப்
பண்டு கடலைபோல் பண்ணின—பெண்டுதான்
யாரேன்ன யாழ்முனியு மன்சுவை யென்றுமா
லூர்நாடிச் சென்று னுவந்து. (சுரு)

சென்றுதண் வைகுந்தஞ் செல்வி யடிபணிந்
தன்றுன்னு லாகா வருங்கடலை—யின்று
பதஞ்செய்தா ளன்சுவையும் பாரேன்று காட்டக்
கதமடைந்தாள் பொன்னனங்கு கண்டு. (சுசு)

கோவணங்கு செய்திட்டக் கூலத்திற் சேர்சுவைகள்
கோவணங்கே பாரேன்று கோட்டிப்பண்—பாவணனும்
வேதாந்தச் செம்பொருள்வாழ் வெள்ளி வரைநண்ணி
மாதாவைக் கண்டான் மகிழ்ந்து. (சுஎ)

கண்டிருந்து போற்றிக் கடிந்த கடலையை
யண்டி யநுசுவையு மாக்கினு—ஞண்டுநீ
பாரேன்று தந்து பழமுனியும் மான்வாழுந்
தார்வனத்திற் சென்றான் தனித்து. (சுஅ)

கலகமுனி சென்றபின் காயத்ரி வாடி
யுலகறிவை நம்மி லுயர்ந்தாள்—பலரும்
பழிக்க வழிவைத்த பத்தினியாட் கற்பை
யழிக்கவழி யேதென்று ளாங்கு. (சுகூ)

இறைவனில் வந்தபி னேந்திழையா ளேங்கிக்
குறையெல்லாம் முன்னின்று கூறி—மறையோய்

(சுசு) கதம் - கோபம்.

(சுஎ) கோ - விண் - பூமி

(சுஅ) மான் - மிருகம், தார் - புட்பம்,

புலிப்பேதைக் கற்பைநீர் புண்படுத்தா விட்டா
லலிப்பே னுயிரென்று ளாங்கு. (எ0)

தரைப்பேதைக் கற்பைத் தடுக்க நினைப்போ
ரரைப்போதும் வாழா ரழிவா—துரைத்தேன்யான்
செல்கின்றேன் காணென்று சீதமால் வாழ்கின்ற
வில்வேலி நாடினான் விண்டு. (எக)

கூலத்தைக் கண்டயர்ந்த கோதை மிகவாடி
யாலம் நிகர்கோவி லப்புவிழ—மாலடியைக்
கண்டு பணிந்து கடலை விதமெல்லா
மண்டி யறிவித்தா ளங்கு. (எஉ)

அழுது வருசுயைமி னங்கற்பை நீக்கத்
தொழுது சலசைத் துதிக்கப்—பழுதுக
ளுண்டாமு ளுளி லுவனத்தோட்ட ராவணனுங்
கண்டா னடுவேனூர் கைத்து. (எஙு)

என்றுரைக்க மாலு மிளையாள் மிகச்செயிர்த்து
நன்றுமக் காகாதோ நாடுங்கா—லின்றவள்
கற்பழிக் காவிட்டாற் காயமழிப் பேனென்ன
கற்பத்தா னுற்றுன் கலுழ்ந்து. (எச)

வந்த விதாதா வருந்திப் படிவீழ்ந்து
தந்தை திருவடியைத் தான்வணங்கி—முந்தை
கடலை விதமுங் கலைவாணி சூளும்
நடலையாய்ச் சொன்னான் நயந்து. (எரு)

(எஉ) ஆலம் - நஞ்சு, கோ - விழி, அப்பு - நீர்.

(எஙு) சலசை - திருமகள், கடுவன் - எமன், கைத்து - புழுங்கி.

(எச) கற்பத்தான் - பிர்மா

(எரு) விதாதா - பிர்மா, நடலை - நடுக்கம்.

வருந்து மகவை வனமாலி சேர்த்துத்
திருந்தவிங் குன்குறையைத் தீர்த்தாய்—முறிந்தமு
வெண்மடங்கா மென்குறையை யெவ்விடத்திற் றீர்ப்பேன்
கண்மணியே வாவென்முன் கண்டு. (எசு)

சாம்பவியுங் கூலத்தின் சங்கடத்தைச் சங்கரன்முன்
றேம்பிக் குறையைத் தெரிவித்துத்—தீம்பு
யிழைத்தபெண் கற்பை யெடுப்பதென்ன கட்டம்
பிழைத்தனரோ தார்வனத்தார் பின். (எஎ)

என்று பலவா யியம்பத்தார் மாதர்கள்
நன்றில்லாக் காரியத்தை நாடினர்—குன்ற
நெறியழிந்து நின்றார் நிறைவழார் நற்பெண்
ணறிசெல்ல லென்று னரன். (எஅ)

சம்பு தடுத்துமதைச் சங்கரியுங் கேளாம
லம்புவியி லன்சுயையி னன்பைநீர்—வெம்பக்
கெடுத்தொழியா விட்டாற் கெடுதலெனக் கென்ன
வடுத்திகுவ குற்று ரறிந்து. (எகூ)

வந்தடைந்த வேதன் வலவன் முகக்குறியுஞ்
சிந்தை நிவைப்புஞ் சிவனறிந்து—முந்தை
முனிசெய்த சூது முயன்றிங் கடைந்தீர்
சனியெனக் கேட்டேன்றார் சார்ந்து. (அ0)

மங்கையர் கட்டுரையை மாற்றினீர் நாட்டிலே
தங்காம லூற்றுநான் தங்கினேன்—சிங்கியை
யுண்டேனு னுலு முற்றசொல் மாவிடமாங்
கண்டேனில் கோரமென்றார் கைத்து. (அக)

மும்மாதர் வன்மொழியால் மூவரையர் சாவலயி
லம்மாதின் கற்பழிக்க வாறுகொள—விம்மாலிற்

(அ0) வேதன் - பிர்மா, வலவன் - விட்டுணு.

(அக) சிங்கி - விஷம்.

(அஉ) ஐயர் - முனிகள்,

கண்டறிவா ரேன்று கலங்கியோன் றீர்மூன்ரூர்
பண்டரியும் பூண்மறைத்தார் பார்த்து. (௮௨)

மூடி யிரப்பார்போல் மூகைவாழ் சோவலயி
லோடி யநுசுயையி னுள்ளிடத்தை—நாடி
வருந்தியம் மூவரும் வாரியிலே நின்று
திருந்தவிதைச் சொன்ஞர் தெரிந்து. (௮௩)

வருடை யுடையவனெம் வாடுமுகங் கண்டுந்
திருடனுய்ப் பண்டிற் றிகைத்து—முருடின்றிப்
பற்றி யெரிக்கின்ருன் பத்தினியே நீயிரங்கி
யுற்றபலி தாவென்ரு ரோர்ந்து. (௮௪)

நாதாக்கள் மூவரும் நாடி யநுசுயையே
ஆதாரப் பிண்ட மருளேன்ருர்—மேதாக்கள்
கைநீட்டிக் கேட்டார்கள் கண்ணன்முன் மாபலிபாற்
கைநீட்டக் கற்றதையுங் கண்டு. (௮௫)

அயனுந் திருமாலு மைம்முகனைப் போற்றி
நயமுள்ள மாதின்முன் நண்ண—பயமா
யிருத்தலா லொன்று மெதிரி லுரையோம்
பொறுத்தலும் பாரமென்ருர் போந்து. (௮௬)

பத்தினியா ளார்வமாய்ப் பாகந்தோ ளேந்திப்பெண்
பித்தரே பிண்டம் பிடியென்ன—வுத்தமர்கள்
வாங்காமல் மாழ்க வரன்மாதே நிர்வணமா
யேங்காமற் ருவென்ரு னீங்கு. (௮௭)

---

(௮௨) ஒன்றீர் மூன்ருர் - முத்தொழிலார், அரி - ஆயுதம்.

(௮௩) மூகை - கோட்டான், வாரி - வாசல்.

(௮௪) வருடை - ஆடு, பண்டி - வயிறு, முருடு - விறகு, பலி - பிச்சை.

(௮௭) பாகம் - பிண்டம், பிச்சை ; தோள் - கை.

சொன்ன மொழிக்கிரங்கிச் சொல்வழாள் தன்பதியை
உன்னி குழல்விரித்திவ் வூரிலே—பன்னும்
நிறைகற்புச் சூளாகில் நீலிகுழல் மெய்யைக்
குறையின்றி மூடென்முள் கூப்பி. (அஅ)

விரிகுழலும் நீண்டு விளங்கிழையாள் யாக்கை
பரிவுடனே மூடிப் பரவ - வரிவை
பலியேந்திச் செல்ல பரமன் மறுக்க
வலிவோ டிதுசொன்னுள் வந்து. (அகூ)

பத்தினிகள் துய்யத்தைப் பார்க்கநீ ரிவ்விதமாய்ச்
சித்திரங்கள் செய்தீரோ சிட்டரே—சத்தியமாம்
மங்கைப் பகங்கரண மக்களாகச் சாபம்
நங்கை பிடியென்முள் நைந்து. (கூ௦)

நாட்டின் பிறப்பிறப்பில் நாடாத வென்வனநீ
வீட்டிற் பிறக்க விதித்தாயுன்—வீட்டிலே
காலாவேன் காணென்று கங்காளன் காலானுன்
காலானுர் கண்ணனயன் கண்டு. (கூக)

கண்டு முவளகவளக் காதலாய்க் காக்கப்போன்
பெண்டுவநு தூயை பெருவிரலி—லுண்டு
களையார மாமருந்து கைகூப்பித் தந்து
தளையாரத் தொட்டிலிலே தாழ்ந்து (கூஉ)

உத்தரையின் குக்கி லுயர்வில்லான் கால்கவணயாற்
சித்திரித்து நாரணனுற் சேர்த்துவோர்—புத்திரனுய்
வந்த பரீச்சித்தே வண்குழந்தைக் கிப்போதும்
பந்தமுத மங்குலிலே பார். (கூங)

(கூக) கால் - பிள்ளை, கங்காளன் - சிவன்.

(கூஉ) மருந்து - தேவாமிர்தம், தளை - சிலம்பு.

(கூங) குக்கி - வயிறு, வில்லான் - துரோணுச்சாரி, கால் - (குமாரனுகிய) அஸ்வத்தாமா, அங்குல் - விரல்.

தனித்தனியாய் விண்டாண்டிற் ருலாட்டிக் காக்கச்
சனிகோண்ட சூர்கள் சலித்துப்—பனிவிண்ணி
லொன்ருகச் சேர்ந்தே யுயர்பண் ணுரைமுனியை
யின்றே வரநினைத்தா ரீங்கு. (கூச)

நினைத்த முனியுமந் நேரிழையார் முன்னே
யனைத்தும் பயில வறிந்து—வனத்தி
லநுசுயையைக் கண்டே யனுதிகளை மீட்கத்
தனிப்புவியிற் ருழ்ந்தார் தணிந்து. (கூரு)

அன்சுயையின் முன்றி லரனயனு மச்சுதனும்
போன்சிசுவாய் வண்டிற் புரண்டாட—தண்மொழியீர்
பாருங்கள் பத்தரெனப் பண்முனியும் பற்காட்டி
மேருவரை நாடினுன் மீண்டு. (கூகு)

பத்தாக்கட் கோள்வதற்குப் பன்னிமா ரத்தத்தால்
முத்தான சிற்றில் முனையேந்திச்—சத்தான
மாங்கல்யப் பிச்சை மனமகிழ்ந்து தாவென்று
பூங்குழலார் கேட்டார் புகழ்ந்து. (கூஎ)

மும்மூர்த்தி தேவிமார் முன்தானை யேந்திமண்
ணம்மாதின் முன்னிற்க வண்டர்களு—மிம்மாவின்
வாசிகளுங் கந்தர்வர் வல்லரக்கர் தாபதர்கள்
கூசிமனம் விண்டார் கோதித்து. (கூஅ)

போன்னனணங்கார் சோற்கேட்டுப் பூவணங்கு வேமமுடன்
விண்ணவரைக் கோண்டேக வேட்டதைப்போல்—மண்ண
கூறிவாய் மூடுமுன் கூடியம் மூவருமே [ணங்கு
நாரியரை நாடினுர் நட்பு. (கூகூ)

(கச) விண்டாண்டு - தொட்டில், சூர் - தெய்வம்.
(கரு) அனுதி - கடவுள்.
(கசு) வண்டில் - தொட்டில்.
(கஎ) அத்தம் - கை, சிற்றில்முனை - முன்தானை
(கக) ஏமம் - களிப்பு, வேட்டல் - விரும்பல்.

விண்ணோர்பூ வார்விடுத்தார் வேட்புண்டார் மண்ணோர்க
ளெண்ணில்லா வாத்ய மிசைத்தார்கள்—பெண்ணண
வரம்யாது கேளென்ன வந்தநீ ரென்றன்
உரமகவாய் வேண்டுமென்று ளுவந்து. (௧00)

கேட்டநீ யெம்மமிசச் சேய்கட்காய்க் கேள்வனோடு
காட்டில்லா நோன்பெடுத்துக் காதலர்கள்—தேட்டி
பரவுசித்திக் சோள்ளென்று பண்ணவனுஞ் சென்றான்
கரவுமுனி வந்தான் களித்து. (௧0௧)

பத்தினியாள் பத்தாவின் பாதத்தைப் பார்த்துவிற்
சித்திரத்தைக் கன்னமிட்டுச் சேய்கட்காய்க்—குத்திப்
பதியோடுமா நோன்பெடுத்துப் பர்க்கனரு ளாற்போன்
மதிமுளைகள் பெற்றாள் மகிழ்ந்து. (௧0௨)

வேத னலவனும் விண்டுதத் தாத்திரியாய்
நாதன்துர் வாசராய் நாடியே—வேதநூல்
பாடிப் புவியிற் பலவிசைத்தார் பற்றுரை
நாடி நலங்கொண்டாய் நம்பு. (௧0௩)

சுகமுனிவர் தாவளச் சுதற்கவணயின் பெண்சே
யகமகிழ்ந்து போற்றி யடிகாள்—மகளிர்
அருநிறையின் மார்க்கத்தை யானறிந்து கொள்ள
திருவருவளத் தாவென்றான் தேர்ந்து. (௧0௪)

கற்பு நிலை

பெண்மாலை பூட்டுமுன் பெற்றோரு முன்பின்னும்
நன்மாலை நாட்டியபின் நாதன்கீழ்ப்—பொன்மாலை

---

(௧00) வேட்பு - ஆசை, உரம் - ஞானம்.

(௧0௧) பரவு - பரந்த, கரவு - மறைந்த.

(௧0௨) கன்னம் - செவி, குத்தி - அடக்கம், பர்க்கன் - கடவுள், மதி - அறிவு.

யத்த மடங்கியடி னம்மா னருமகன்கீழ்
நத்தி யிருத்தல் நலம். (க)

நாணமட மச்சம் பயிர்ப்பென்னு நாற்குணமும்
வேணபடை யாக விரும்பியே—காணும்
புலனைந்தும் போக்கிப் புலனைநாற் பாலு
மலையவிடாப் பெண்ணே யழகு. (உ)

காந்தன் கிழவனாய்க் காணக் குரூரமாய்ச்
சாந்தஞ்சீர் காணாச் சழக்கனாய்—மாந்தரில்
மூடன் பிணியனாய் மூர்க்கன் முரடனாய்
நாடினுஞ் சேர்வாள் நயந்து (ங)

கல்லுந் தருவுங் கணவனா னலவரை
எள்ளின்றி யேற்றிடுவா ரேர்மாதர்—விள்ள
குலமகளின் பொற்புக் கொழுநனையே சேர்வார்
உலகதனை வேண்டா ருவந்து (ச)

அன்பிற் பயந்தா ளடியாள் பணித்தன்மை
மண்ணா மடக்க மதியமைச்சன்—மின்னுபணி
தாசி துயிலுந்தன் தாய்க்குப்பின் தாரமாய்ப்
பேசு குணமுடையாள் பெண். (ரு)

அழகிளமை செல்வ மருங்கல்வி கீதம்
இழி குலத்தார் பெற்றோ ரிளைஞர்—மொழியிலே
இன்சொற் குமரரை யிச்சிப்பா ரிச்சியார்கற்
பண்பு நிறையுள்ள வணங்கு. (சா)

மைத்துனர் நாத்திகள் மாமிமற் றோருக்கும்
பத்தியா யாவனைப் பணித்துமே—சித்த

(க) அத்தம் - காடு, அம்மான் - மாமன்.

(உ) புலன் - அறிவு, புலன் - ஐம்புலன்.

(ரு) பயந்தாள் - தாய், அடியாள் - வேலைக்காரி, துயில் - சுகநித்திரை.

மயல்வீடு நாடாள்பெண் ணுளின்றிச் செல்லாள்
செயல்மனங் கொண்டவளே சீர். (எ)

அயலார்தம் முன்னோ ரவர்சீர்சு ரன்னோர்
துயரெல்லாந் தன்றுயராய்த் தூக்கி—மயலார்
பிறர்வசையை நீத்துப் பிறருரையைக் கேளா
வறமுடைய பெண்ணே யணங்கு. (அ)

வரையில் விளைந்தாலும் வன்கறையை நாடிக்
குறையில் மசியுங் குணம்போற்—றரையிற்
றிருவிற் பிறந்தபெண் டினவன வேட்டால்
உரிமையாய்ப் பேணுவா ளோர்ந்து. (கூ)

பார்க்கப் பதமாய் பதிக்குப் பொருத்தமா
யூர்க்கு மதிக்க வுயர்பாலாய்க்—காக்கவே
யாணந் தயைசாந்த மாண்மைத் தவமிதவணப்
பேண நடப்பவளே பெண். (க0)

மாடதிக முள்ள மனையி லுதித்தாலுங்
கோடிபணி பூண்டாற் குவலயத்தி—லாடவர்கள்
கண்டுவிழை கொள்வரதிற் கற்புகெடு மென்றஞ்சிப்
பண்டுபணி நீக்குவாள் பார். (கக)

வருந்தடிசில் புக்கி வலிசுவைகண் டட்டிப்
பொருந்த கணவற்குப் பூட்டி—விருந்தாய்க்
கொடுப்பாள்பின் னேக்காள் குணங்கொள்வாள் தான்பின்
படுப்பாள் முனெழுவாள் பார்த்து. (கஉ)

(எ) செயல் - காவல்.

(அ) சீர் - செல்வம், துயர் - வியாதி, தூக்கி - நினைத்து.

(கூ) கறை - உரல், [illegible] - தரித்திரன், வேட்டல் - கொள்ளல்.

சாந்தன் வதனவிணை கண்டு நடப்பவரு
மேந்தற் கடுஞ்சொல்வல யின்சொல்லாய்—மாந்தியவன்
வைதவலயே வாழ்த்தலாய் வாய்ச்சொல் மறுக்காதாள்
பெய்யெனப் பெய்யு மழை. (௧௯)

சூர்வணங்காள் காந்தனையே சொந்தக் கடவுளாய்ப்
பாரணங்கு பேணிப் பலவறமுஞ்—சீர்பெருக
லில்லத் தணங்கா யிருந்துபுரி வாளமே
லில்லத்தார் போற்றுவா ரீங்கு. (௨௦)

திங்கட் குடைநிழலிற் றேரிநகர் காக்குந்தன்
திங்கட் குலவேந்தே தென்குழலார்—மங்கா
நெறிமுறைக ளிங்கு நிகழ்த்தினோமன் றுயை
யுரிமையாய்க் கொண்டா ளுவந்து. (௨௧)

கற்புள்ள கன்னியரால் கார்மேகங் காண்டலும்
வெற்பின்மே லென்றூழ் விளங்குதலும்—பொற்புள்ள
வீடடைய வாரி விடுப்பதால் வேந்தேநு
ராடவளே யம்புவிக் கம்பு. (௨௨)

சிசுவாய்க் கடவுளரைச் செய்தவறு றுயை
சசியோடு மாதராய்ச் சார்ந்து—நகுவி
லணங்கா யமைந்ததா லன்னலே யாம்சால்
வணங்குவதே வன்மையென வாழ்த்து. (௨௩)

மாநிலத்து மாதர்காள் மாயோ ளறுசுவையின்
நானி கதையின் நலமறிந்து—மானியெனும்
பேர்கொண்டு வீடடையப் பேழ்கற்பைக் கற்கவே
யேர்கவியைச் சொன்னே னெழுந்து. (௨௪)

அன்சுவையா மாத ரறுவருமே வாழிமிகு
நன்மொழிகற் புள்ளார் நடுவாழி—பொன் நூலோர்
விண்ணோரும் கோவாழி வேல்வேந்தர் மந்திரிகள்
மண்ணோரும் வாழ்வார் மகிழ்ந்து. (௨௫).

---

(௨௨) என்றூழ் - சூரியன், வாரி - வழி.
(௨௪) மாயோள் - பெண், பேழ் - பெருமை.
(௨௫) நடு - பூமி, நூலோர் - வேதியர், அம் - மழை.

நிறையுடைய நாயகிகள் நேயருக்கு நேர்ந்த
குறைநீக்கக் குற்றேவல் கொள்வார்—வரைமார்பா
கன்னபுரி கோமகளுங் காந்தனுகாக் காசினியில்
புன்றொழிலைச் செய்தாள் புகுந்து. (கங)

நான்மாடக் கூட னகரைப் பரிக்கவந்த
கோன்கவியைத் தூறிக் குலஞ்செல்ல—மீன்கண்
மணையறிந்து மன்னர்க்காய் மாபுலவர் மையைக்
கணைசுமந்து கண்டித்தாள் காண். (கச)

வல்லாளன் சேயின்றி வாட்டமுற்றுச் சங்கமர்க்
கெல்லாங் கொடுப்பதா யேடெழுதி—நல்லாள்கள்
கிட்டாதால் வாடப்பெண் கேள்வன் குறைநீக்க
முட்டியனைச் சேர்ந்தாள் முணங்கு. (கரு)

கோல வணியாடை குஞ்சிமஞ்சள் கந்தமுங்
கோலத் திரையல் குசுமமு—மாலத்தின்
புற்புதமாம் பூட்சிக்குப் போற்பல்ல பெண்ணுக்குக்
கற்பி னழகே யழகு. (கசு)

வீடுவரு மார்க்கம் விளம்ப தவமவற்றுட்
கூடுங் கலக்கங்கட் கோடியாம்—பாடுகின்ற
வாச்சிரமம் நாலி லவனவர்க்கு மிலைமே
வாச்சென்று வீடாகு மாம். (கஎ)

வாரிக் கலத்தாலும் வன்பாவல நீள்கழுத்தா
லேரிக் கடத்தல்போ லில்லறத்தில்—நாரிகள்
எண்ணுன் சரஞ்செய்து ஏந்தலுடன் வீடடைய
மண்ணுள் சற்பே மருந்து. (கஅ)

(கச) தூறி - பழித்து, குலம் - அரண்மனை, மை - குறை.

(கரு) சங்கமர்-பிச்சைக்காரர், முட்டியன் - பிச்சைக்காரன்.

(கசு) கோலம் - அழகு - பாக்கு குஞ்சி - கூந்தல், திரையல் - வெற்றிலை, குசுமம் - பூ, ஆலம் - நீர், புற்புதம் - நீர் குமிழ், பூட்சி - உடல்,

(கஎ) தவ - அநேக, கலக்கம் - துன்பம்.

(கஅ) வாரி - சமுத்திரம், கலம் - மரக்கலம்.

93
2-76